**Image**

---

## தனிப்பாடல்கள்

**பின்வரும் பாடலை வைத்து அதன் கீழுள்ள வினாக்களுக்கு விடைதருக**

**பங்கப் பழனத் துழுமுழவர்**
**பலவின் கனியைப் பறித்ததென்று**
**சங்கிட் டெறியக் குரங்கிளநீர்**
**தனைக்கொண் டெறியுந் தமிழ்நாடா**
**கொங்கர்க் கமரா பதியளித்த**
**கோவே யிராச குலதிலகா**
**வெங்கட் பிறைக்கும் கரும்பிறைக்கும்**
**மெலிந்தப் பிறைக்கும் விழிவேலே**

(1) இப்பாடலின் ஆசிரியர் பற்றிய குறிப்புக்களைத் தருக

- **ஆசிரியர் பெயர்** :
- **அவருக்குப் புகழ்சேர்க்கும் நூல்** :
- **தமிழுலகில் அவரை எவ்வாறு அழைப்பர் :**

(2) பின்வரும் தொடர்களைச் சந்தி பிரித்தெழுதுக

- **சங்கிட் டெறியக் குரங்கிளநீர்**
- **கொங்கர்க் கமரா பதியளித்த**

(3) **பழனம்** என்பது குறிக்கும் **மறுபெயர்கள்** மூன்று தருக

(4) உழவர்களின் செயல் எதுவெனக் கூறப்படுகின்றது

(5) **பிறை** என்பது குறிக்கும் மூன்று கருத்துக்களையும் குறிப்படுக

(6) இங்கு குறிப்பிடப்படும் **சோழ மன்னன்** யார்

(7) சோழ மன்னனின் **நாட்டு வளச்சிறப்பு** யாது

(8) சோழ மன்னனின் **அறச் செயலாகக்** கருதப்படுவது யாது (வீரச் **சிறப்பாகக்** கருதப்படும்)

(9) இப்பாடலில் புலவர் குறிப்பிட வந்த விடயம் யாது?

பின்வருவனவற்றுக்கு சுருக்கமான விடை தருக

**1. கொங்கர்க் கமரா பதியளித்த**
**கோவே யிராச குலதிலகா**
**(அ) அமராபதி என்பதன் கருத்து யாது**
**(ஆ) இராச குலதிலகா என்பதால் நீர் கருதிக் கொள்வது யாது**

**2. வெங்கட் பிறைக்கும் கரும்பிறைக்கும்**
**மெலிந்தப் பிறைக்கும் விழிவேலே**
**(அ) அப்பு இறைக்கும் என்பதன் கருத்து யாது**
**(ஆ) இப்பகுதியில் இடம்பெற்றுள்ள அணியினை விளக்குக**

**(3) பங்கப் பழனத் துழுமுழவர்**
**பலவின் கனியைப் பறித்ததென்று**
**அ) பங்கப் பழனம் என்பதன் கருத்து யாது**
**(ஆ) பலவின் கனி எனக்குறிப்பிடப்பட்டது எதனை**

**(4) சங்கிட் டெறியக் குரங்கிளநீர்**
**தனைக்கொண் டெறியுந் தமிழ்நாடா**
**அ) குரங்கின் செயல் யாது**
**(ஆ) தமிழ்நாடா என்பதால் நீர் கருதிக் கொள்வது யாது**

---

**பின்வரும் பாடலை வைத்து அதன் கீழுள்ள வினாக்களுக்கு விடைதருக**

**ஓர் தட் டிலேபொன்னும் ஓர் தட்டி லேநெல்லும் ஒக்கவிக்கும்**
**கார்தட் டியபஞ்ச காலத்திலே தங்கள் காரியப்பேர்**
**ஆர்தட் டினும்தட்டு வாராமலே அன்ன தானத்துக்கு**
**மார்தட் டியதுரை மால்சீதக் காதி வரோதயனே**

**1.** இப்பாடலின் ஆசிரியர் பற்றிய குறிப்புக்களைத் தருக

- **ஆசிரியர் பெயர்** :
- **அவருக்குப் புகழ்சேர்க்கும் நூல்** :
- **தமிழுலகில் இவர் வல்லவராக விளங்கும் துறை :**
- **இவர் வாழ்ந்த காலம்**

**2.** இப்பாடலில் கொடிய பஞ்சம் நிலவும் காலத்து அவலநிலை வெளிப்படும் வகையினை விளக்குக

**3.** சீதக்காதியின் கொடைச் சிறப்பு எவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது

**4.** பின்வரும் தொடர்களுக்கான பொருளைத் தருக

**ஓர் தட்டு :**

**கார்தட்டு :**

**ஆர்தட்டு :**

**மார்தட்டு :**

**பின்வருவனவற்றுக்கு சுருக்கமான விடை தருக**

**5.** ஓர் தட் டிலேபொன்னும் ஓர் தட்டி லேநெல்லும் ஒக்கவிக்கும்
கார்தட் டியபஞ்ச காலத்திலே தங்கள் காரியப்பேர்
(அ) **ஒக்கவிக்கும்** என்பதன் கருத்து யாது
(ஆ) தங்கள் காரியப்பேர் எனப்பட்டோர் யார்

**6.** ஆர்தட் டினும்தட்டு வாராமலே அன்ன தானத்துக்கு
மார்தட் டியதுரை மால்சீதக் காதி வரோதயனே
(அ) **தட்டு வாராமலே** என்பது குறிக்கும் இருபொருள்களும் எவை
(ஆ) **அன்ன தானம்** என்பதால் நீர் கருதிக் கொள்வது

**7.** ஓர் தட் டிலேபொன்னும் ஓர் தட்டி லேநெல்லும் ஒக்கவிக்கும்
கார்தட் டியபஞ்ச காலத்திலே தங்கள் காரியப்பேர்
(அ) **பஞ்ச காலம்** என்பதற்கான சான்றுகளைத் தருக
**(ஆ) "ஓர்தட்டிலே பொன்னும் ஓர்தட்டிலே நெல்லும்"** என்பதன் மூலம் கூற முற்படுவது

---

**பின்வரும் பாடலை வைத்து அதன் கீழுள்ள வினாக்களுக்கு விடைதருக**

**கழியும் பிழைபொருட் டள்ளிநன்னூலாங் கடலிலுண்டு**
**வழியும் பொதிகை வரையினிற் கால் கொண்டு வண்கவிதை**
**மொழியும் புலவர் மனத்தே யிடித்து முழங்கிமின்னிப்**
**பொழியும் படிக்குக் கவிகாள மேகம் புறப்பட்டதே**

1. இப்பாடலின் ஆசிரியர் பற்றிய குறிப்புக்களைத் தருக

- **ஆசிரியர் பெயர் :**
- **இவரது வல்லமைகளாகக் குறிப்பிடப்படுவன :**
- **இவருக்குரிய சிறப்பு :**
- **இவர் வாழ்ந்த காலம்**

2. பின்வரும் தொடர்களுக்கான பொருளைத் தருக

- கழியும் பிழை :
- வழியும் பொதிகை வரை :
- மொழியும் புலவர் :
- பொழியும் :

3. பின்வரும் சொற்கள் குறிக்கும் **பலசொற்களைத்** தருக

☞ **கடல்**

☞ **வரை**

☞ **மொழி**

☞ **கவி**

4. பின்வரும் தொடரைச் சந்தி பிரித்து எழுதுக

➲ **கழியும் பிழைபொருட் டள்ளிநன்னூலாங் கடலிலுண்டு**

➲ **மனத்தே யிடித்து முழங்கிமின்னிப்**

5. வண்கவிதை மொழியும் புலவர் சிறப்புக்களைத் தருக
6. காளமேகப் புலவரின் கவியாற்றல் எத்தகையது
7. **நன்னூலாங் கடல், புலவர் மனம்** என்ற தொடர்களில் புலப்படும் அணிகளைக் குறிப்படுக
8. **கழியும், வழியும், மொழியும், பொழியும்** என்ற சொற்களில் காணப்படும் சொல்லணியாது

9. பின்வரும் சொற்களைப் பிரித்தெழுதுக

* **நன்னூல்** :

* **பொருட்டள்ளி** :

**பின்வருவனவற்றுக்கு சுருக்கமான விடை தருக**

10. கழியும் பிழைபொருட் டள்ளிநன்னூலாங் கடலிலுண்டு
வழியும் பொதிகை வரையினிற் கால் கொண்டு வண்கவிதை
    (அ) **கால் கொண்டு** என்ற தொடரால் நீர் கருதிக் கொள்வது
    (ஆ) **வண்கவிதை** என்றால் என்ன

11. கழியும் பிழைபொருட் டள்ளிநன்னூலாங் கடலிலுண்டு
வழியும் பொதிகை வரையினிற் கால் கொண்டு வண்கவிதை

    (அ) **பொதிகை வரை** என்ற தொடர் குறிப்பது
    (ஆ) **நன்னூலாங் கடலிலுண்டு** என்ற தொடரின் கருத்து யாது

12. மொழியும் புலவர் மனத்தே யிடித்து முழங்கிமின்னிப்
பொழியும் படிக்குக் கவிகாள மேகம் புறப்பட்டதே

    (அ) **மொழியும் புலவர்** என்பதன் கருத்து யாது?
    (ஆ) **கவிகாள மேகம்** என்ற தொடரின் கருத்து யாது?

**பின்வரும் பாடலை வைத்து அதன் கீழுள்ள வினாக்களுக்கு விடைதருக**

**ஆடிக் குடத்தடையு மாடும்போ தேஇரையும்**
**மூடித் திறக்கின் முகங்காட்டும் - ஓடிமண்டை**
**பற்றிப் பரபரெனும் பாரிற்பிண் ணாக்குமுண்டாம்**
**உற்றிடுபாம் பெள்ளெனவே யோது**

1. இப்பாடலின் ஆசிரியர் பற்றிய குறிப்புக்களைத் தருக

- **ஆசிரியர் பெயர்** :
- **இவரது வல்லமைகளாகக் குறிப்பிடப்படுவன** :
- **இவருக்குரிய சிறப்பு** :
- **இவர் வாழ்ந்த காலம்**

2. இப்பாடலில் இடம்பெற்றுள்ள அணி யாது
3. இப்பாடலில் ஒப்பிடப்பட்டுள்ள இரண்டு பொருள்களும் எவை
4. பின்வரும் தொடர்களிலுள்ள இரண்டு பொருள்களையும் தனித்தனியே எழுதுக

| **பாடலடி** | **முதலாவது பொருள் (எள்)** | **இரண்டாவது பொருள் (பாம்பு)** |
|---|---|---|
| **ஆடிக் குடத்தடையும்** | | |
| **ஆடும்போதே இரையும்** | | |
| **மூடித் திறக்கின் முகங்காட்டும** | | |
| **ஓடிமண்டை பற்றிப் பரபரெனும்** | | |
| **பாரிற்பிண் ணாக்குமுண்டாம்** | | |

**5. பின்வரும் தொடரைச் சந்தி பிரித்து எழுதுக**

- ஆடும்போதே இரையும்
- உற்றிடுபாம் பெள்ளெனவே யோது

**பின்வருவனவற்றுக்கு சுருக்கமான விடை தருக**

**6. ஆடிக் குடத்தடையு மாடும்போ தேஇரையும்**
**மூடித் திறக்கின் முகங்காட்டும்**

(அ) **முகங்காட்டும் என்பதால் நீர் கருதிக் கொள்வது யாது**
(ஆ) **ஆடி, மூடி என்ற சொற்களில் காணப்படும் சொல்லணியாது**

7. **............................................................ஓடிமண்டை**
**பற்றிப் பரபரெனும் பாரிற்பிண் ணாக்குமுண்டாம்**
**உற்றிடுபாம் பெள்ளெனவே யோது**

(அ) **பிண்ணாக்கு** என்பது குறிக்கும் இரு பொருள்களும் எவை
(ஆ) **உற்றி** என்பதன் கருத்து யாது?

- ☎ பெயர்ச் சொல்
- ☎ வினைச் சொல்
- ☎ இடைச்சொல்
- ☎ உரிச்சொல்

**பின்வரும் வினாக்களுக்குப் பொலுத்தமான விடையைத் தெரிவு செய்க**

1)
(1) இடுகுறிப் பெயர் : மரம், கடல், மண்
(2) காரணப் பெயர் : பறவை, மண்வெட்டி, வளையம்
(3) காரணப் இடுகுறிப் பெயர் : முள்ளி, முக்கண்ணன், நாற்காலி
(4) மரபுப் பெயர் : கன்று, குட்டி, பிள்ளை

2)
(1) ஆக்கப் பெயர் : முதலாளி, பெண்ணியம், காட்சி
(2) கூட்டுப் பெயர் : நீர்வீழ்ச்சி, கடலலை, பொரியல்
(3) தொழிற் பெயர் : பாடுதல், ஆடுதல், போகாமை
(4) வினையாலணையும் பெயர் : வந்தவன், உண்டவன், படித்தவன்

1. பெயர் + விகுதி என்ற அமைப்பைக் கொண்டமைந்த பெயர்
(1) ஆக்கப் பெயர் (2) கூட்டுப் பெயர்
(3) தொழிற் பெயர் (4) வினையாலணையும் பெயர்

2. கூட்டுப் பெயர் அமைப்பிற்குப் பொருத்தமற்றது
(1) பெயர் + பெயர் (2) பெயர் + வினை
(3) வினை + பெயர் (4) பெயர் + பெயர் + பெயர்

3. எழுதுகோல் என்பது
(1) ஆக்கப் பெயர் (2) கூட்டுப் பெயர்
(3) தொழிற் பெயர் (4) வினையாலணையும் பெயர்

4. இரண்டாம் வேற்றுமையின் நீத்தல் பொருளுக்கு எடுத்துக் காட்டாக அமைவது
(1) இறந்தது மகனா (2) மலையில் வீழ் அருவி
(3) தசரதன் உயிரைத் துறந்தான் (4) அரசனுடைய முடி

5. பாலோடு கலந்த நீர் என்பது
(1) இரண்டாம் வேற்றுமை (2) மூன்றாம் வேற்றுமை
(3) நான்காம் வேற்றுமை (4) ஐந்தாம் வேற்றுமை

6. மாணவர்களுக்கு உரியது கல்வி என்பது நான்காம் வேற்றுமையின் என்ன பொருளில் அமைந்துள்ளது
(1) கொடை (2) பகை (3) உறவு (4) தகுதி

7. தற்கிழமை , பிறிதின்கிழமை என்ற பொருள் கொண்டமைந்த வேற்றுமை
(1) ஐந்தாம் வேற்றுமை (2) ஆறாம் வேற்றுமை
(3) ஏழாம் வேற்றுமை (4) ஐந்தாம் வேற்றுமை

8. அறிவுமதியினுடைய வீட்டை நோக்கி நடந்தோம் என்பது
(1) தற்கிழமை (2) நிமிர்த்த காரணம் (3) பிறிதின்கிழமை (4) முதற்காரணம்

9. பின்வருவனவற்றில் தெரிநிலை வினைப்பகுபதம்

(1) பொன்னன் (2) நடந்தான் (3) பெரியன் (4) அறிஞன்

10. உடன்நிலை மெய்ம்மயக்கம் இடம்பெற்ற சொல்
கஞ்சன் (2) தலைவன் (3) கொக்கு (4) தங்கை

11. பின்வருவனவற்றில் கூட்டுப்பெயரடையாக அமைந்தது
அந்தந்த (2) சுவையான (3) விரைவாக (4) எந்தவிதமான

12. ஆறாம் வேற்றுமையின் திரிபின் ஆக்கத் தற்கிழமை இடம்பெற்றது
(1) நெல்லினது பொரி (2) கண்ணனது கருமை
(3) கோதுமையினது மா (4) குமரனது நாள்

பின்வரும் பாடலை வாசித்து அதன் கீழுள்ள வினாக்களுக்கு விடை தருக

**இன்னவைதாம் கவி எழுத**
**ஏற்ற பொருள் என்று – பிறர்**
**சொன்னவற்றை நீர் திரும்பிச்**
**சொல்லாதீர்... சோலை, கடல்**
**மின்னல், முகில், தென்றலினை**
**மறவுங்கள்.. மீந்திருக்கும்**
**இன்னல், உழைப்பு, ஏழ்மை, உயர்வு**
**என்பவற்றைப் பாடுங்கள்**

13. இப்பாடலில் கவிஞர் வலியுறுத்துவது
(1) கவிதை எழுத வேண்டும்
(2) கவிதைக்கு ஏற்ற பொருள் இயற்கை
(3) கவிதைக்கு ஏற்ற பொருள் மக்கள் இயற்கை
(4) புதிய விடயங்களைக் கவிதையில் சேர்க்க வேண்டும்

14. சோலை, கடல் என்பவற்றின் ஒத்த கருத்துக்கள் முறையே
(1) தண்டலை, அசுவம் (2) ஆழி, பொழில்
(3) வனம், சாகரம் (4) கா, பரவை

15. இன்னல், உழைப்பு, ஏழ்மை, உயர்வு என்பவற்றைப் இங்கு **பாடுங்கள்** என்பது
(1) தனி வினை (2) ஏவல் வினை (3) வியங்கோள் வினை (4) செய்வினை

16. ஓடு மீன் ஓட உறு மீன் வருமளவும் இங்கு இடம்பெற் உரிச் சொல்
(1) ஓடு (2) மீன் (3) ஓட (4) உறு

**பின்வருவனவற்றுக்கு சுருக்கமான விடை தருக**

**பின்வரும் வாக்கியங்களிலுள்ள எழுவாய் பயனிலைகளை இனங்கண்டு எழுதுக**

1. 'அப்பால் மூழ்கிற்று கதிர் நெடுங்கடலுள்'
2. 'மலரின் தேனில் மயங்கின கார்காலக் கருவண்டுகள்'.
3. ' சூரியன் தவிதவிக்கும் நெடுஞ்சாலையோரம் வெயிலை உதறி எறிந்தவாறு நடக்கிறாள் மூதாட்டி'
4. 'கணங்களின் பேராற்றில் மின்னி மறைகின்றன பல்லாயிரம் எண்ணக்குவியல்கள்'
5. மலரின்' தேனில் மயங்கின கார்காலக் கருவண்டுகள்'

**பின்வரும் வாக்கியங்களில் பயின்றுள்ள அணி யாது எனக் குறிப்பிடுக**

1. 'வேட்டை நாய் போலஅவள் முன்னே ஓடிச் செல்கிறது நிழல்'
2. தறி என்ற சொல் பொருள் தரும் வகையில் வாகக்கியங்களில் அமைத்துக் காட்டுக
3. தலையிருக்க வாலாடக் கூடாது என்ற மரபுத்தொடரின் கருத்து யாது

**வினை - செய்வினை – செயற்பாட்டு வினை**

1. "வ.வே.சு.ஐயரால் பாரதியின் கவிதைகளுக்கு விமர்சனம் எழுதப்பட்டது- இதனைச் செய்வினை வாக்கியமாக மாற்றி எழுதுக
2. 'சினிமாவுக்கு கடும் உழைப்பும் பயிற்சியும் அவசியமற்றவை" மேற்படி எதிர்மறை வாக்கியத்தை உடன்பாட்டு வாக்கியமாக்குக

***

Last modified: 1:51 pm